**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

CC.No.153/2023
Prosecution witness.8

| | |
|---|---|
| பெயர் : திரு. கோவிந்தராஜன் | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05[rd] day of March 2025.

05.03.2025

(எதிரிகள் 1, 3, 4, 5 ஆஜர். 2, 6 ம் எதிரிகள் ஆஜர் இல்லை. 2, 6 ம் எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது தேவிப்பட்டிணம் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 11.01.2023 ம் தேதி இரவு 19.00 மணியளவில் நான் இளஞ்செம்பூர் காவல் நிலையப் பொறுப்பில் சிறப்பு சார்பு ஆய்வாளராக இருந்தபோது மாண்புமிகு நீதிமன்ற உத்தரவு படி Cr.mp.No.4046/2022 ன் மனுவின் உத்தரவை பெற்று குற்ற எண் 2/2023 இதச பிரிவு 147, 148, 294(b), 323, 324, 506(2) மற்றும் 4 of TNPHW Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7).**

**2)** பின்பு அன்றைய தினமே 20.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளான ஜான்பீட்டர் த.பெ.வேதமுத்து மற்றும் ஜான்பீட்டர் த.பெ.குழந்தை ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தேன். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8. பார்வை மகஜர் அ.சா.ஆ.9).**

**4)** அன்றைய தினமே பட்டியல் சாட்சிகள் ஜோவித்பிரியா, அருள்பிரகாஷ்,

ஆரோக்கியம், பிரகாசம், ஜோசப்மேரி, ஜான்பீட்டர் த.பெ.வேதமுத்து மற்றும் ஜான்பீட்டர் த.பெ.குழந்தை ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு பணிமாறுதல் ஆகி சென்றதால் வழக்கு கோப்பை காவல் நிலையத்தில் ஒப்படைத்து சென்றுவிட்டேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1) நான் இளஞ்செம்பூர் காவல் நிலையத்தில் ஒரு நாள்தான் பணியில் இருந்தேன் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் 06.10.2022 ம் தேதி நடந்ததாக எனது விசாரணையில் தெரிய வந்தது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 11.01.2023 ம் தேதிதான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அ.சா.1 ஜோவித்பிரியா சம்பவ நடந்த தேதிக்கு பின்னிட்டு இளஞ்செம்பூர் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தாரா என்றால் இல்லை.

2) மருத்துவமனையில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் சிகிச்சையில் இருந்த போது மருத்துவர் காவல் நிலையத்திற்கு தகவல் எதுவும் கூறினார்களா என்றால் எனது விசாரணையில் தெரியவில்லை. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 5 கீ.மீ இருக்கும். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் புகார்தாரர் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 20 மீட்டர் இருக்கும். அ.சா..ஆ.8 மாதிரி வரைபடத்தில் அ.சா.1 வீடு காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

3) சம்பவ இடத்தில் சுற்றியுள்ள சூசையம்மாள், ஆகஸ்டின், ராணி, சவராஜ், அருளாந்து ஆகியோர்களை விசாரித்து வழக்கின் சாட்சியாக சேர்ந்துள்ளேனா என்றால் இல்லை. அ.சா.1 கொடுத்துள்ள புகாரிலோ, எனது விசாரணையிலோ அ.சா.2 க்கு எந்த கையில் எந்த இடத்தில் காயம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.2 எனது விசாரணையில் அ.சா.2 க்கு எந்த கையில் எந்த இடத்தில் காயம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

4) 3ம் எதிரி ஆரோக்கியம் அ.சா.2ன் முகத்தில் அடித்தார் என்று அ.சா.1 புகாரிலோ, எனது விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி ஜோசிப்பின்மேரி அ.சா.1ன் அம்மா என்றால் எனது விசாரணையில் அது பற்றி தெரியவரவில்லை. சம்பவம் தொடர்பாக புகார் கொடுக்கப்பட்டதா அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பது பற்றி முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அ.சா.1 குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்து வந்துள்ளது என்றால் சரிதான். இருவருக்கும் இடையே இடம் சம்பந்தமாக பரமக்குடி சார்பு ஆட்சியர் அலுவலகத்தில் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

5) அ.சா.1 மற்றும் அ.சா.2 தானாக இருசக்கர வாகனத்தில் செல்லும் போது விழுந்து ஏற்படுத்திக்கொண்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டு அதை முறையாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி கொடுத்த பொய் புகாரை முறையாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.